REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 264

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: சித்திரை 8உ செவ்வாய் (20—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 9உ புதன் (21—4—54)

கன்னட—மராத்தி மொழி மோதுதல்

கன்னடத்திற்கு பதிலாக மராத்தியில் பேசுமாறு வற்புறுத்தல்

பேச மறுத்ததால் — கூட்டத்தில் குழப்பம்

ஒழுங்கைக் காக்க போலீஸ் தடியடி விநியோகம்

பெல்காம், ஏப். 18—

இந்த தாலுக்கு அருகில் உள்ள காபூர் என்ற ஊரில், கன்னட மொழியினர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அண்ணு குருஜி என்ற காங்கிரஸ் தலைவர், சுவாமி ராமானந்த பாரதி என்பவரை கூட்டத்தினருக்கு, கன்னட மொழியில் அறிமுகப்படுத்தி வைத்தார்.

ஆனால், கூட்டத்தில் இருந்த சிலர் அவரை மராத்தி மொழியில் பேசுமாறு வற்புறுத்தினர். அதே இடத்தில் சென்ற திங்களில் நடைபெற்ற கூட்டமொன்றில் அண்ணு குருஜி மராத்தி மொழியில் பேசும் மக்களை இழிவாகப் பேசினார் என்றும், அதற்காக மன்னிப்புக் கோர வேண்டுமென்றும், அக்கூட்டத்தினர் வலியுறுத்தினர்.

கூட்டத்தினர் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல், பேச்சாளர் பேச முயன்றார். முடிவு வரையில் பேச முடியாமல்போகவே, பேச்சாளர் கூட்டத்தை இடையிலேயே முடித்துக்கொண்டு வெளியேற முயற்சித்தார்.

இத்தருணத்தில் பேச்சாளர்களைப் பின்தொடர்ந்து பொதுமக்கள் தாக்க முயன்றனர். இரு சாரருக்கும் கைகலப்பு ஏற்படாமல், இடையில் இருந்து பாதுகாத்து வந்த இரு போலீஸ் சிப்பாய்களுக்கு லேசான காயமேற்பட்டது. அதன் பிறகு கட்டுக்கடங்காத கூட்டத்தினர்மீது போலீஸ் தடியடி விநியோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தது.

"நிச்சயமாகக் கூற முடியாதாம்!"

அகஸ்டா, (ஜார்ஜியா) ஏப். 19—

இந்தோ—சீனாவிலிருந்து பிரெஞ்சுப் படைகள் வாபசானால், அவ்விடத்திற்கு அமெரிக்கா துருப்புகளை அனுப்பும் என்று நிச்சயமாகக் கூற முடியாது என டல்லஸ் தெரிவித்துள்ளார்.

மொழிப் போரில் வெற்றி!

'வங்காளி' அரசாங்க மொழியாகியது

முஸ்லீம் லீகே முடிவு செய்தது!

கராச்சி, ஏப். 19—

பாகிஸ்தானின் புதிய அரசியலமைப்புத் திட்டப்படி, "உருதுவும், வங்காளி"யும் பாகிஸ்தானின் அரசாங்க மொழியாக்கப் பட்டுள்ளன.

பாக். அ. நி. சபை முஸ்லீம் லீக் சட்டசபைக் கட்சி இந்த முடிவுக்கு வந்தது.

சிந்தி, அரபிக் மொழிகளையும் அரசாங்க மொழியாக்குவது பற்றி யோசித்து இன்னும் ஒரு தரவில் முடிவு கூறவேண்டுமென்று ஒரு குழுவை நியமித்தது.

ஆங்கில மொழி இன்னும் 20 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அரசாங்க அலுவல் மொழியாக இருக்கவேண்டுமென்றும் முஸ்லீம் லீக் கட்சி முடிவு செய்தது.

• • • கிழக்கு வங்கத்தில் வங்காளியை ஒதுக்கி, உருது மொழியை அரசியல் மொழியாக மாற்ற லீக் சென்ற ஏழு ஆண்டுகளாக முயற்சி செய்ததும், அதன் காரணமாக சென்ற தேர்தலில் லீக் படுதோல்வி அடைந்ததும் இந்த முடிவுக்குக் காரணமாகும்.

சக்கரவர்த்தி—கோமதி நதிக்கு பூஜை செய்யவந்த ஐந்து பக்தர்கள் நதியில் மூழ்கி மாண்டனர்.

மதுவிலக்குத் திட்டம் — தோல்வியடைந்துள்ளது!

முன்னாள் பிரதமர் ரெட்டியாரின் தீர்ப்பு

செல்லை, ஏப். 18—

"ஆண்டொன்றுக்கு 16 கோடி ரூபாய்களை புறக்கணித்து அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட மதுவிலக்குத் திட்டம் தோல்வியடைந்து விட்டது!" என்று செல்லை சத்தசன்மார்க்க சங்கத்திலே பேசிய முன்னாள் பிரதமர் ஓ. பி. ராமசாமி ரெட்டியார் கூறினார்.

"ஏழை மக்களுக்கு நன்மைதரும் என்று எண்ணி கொண்டுவந்த இந்தத் திட்டம், அரசாங்க நிர்வாகத் திறமைக் குறைவாலும், பொது மக்களுடைய ஒத்துழைப்பின்மையாலும் தோல்வியடைந்து விட்டது! அது உண்மையில் வெற்றியடைய வேண்டுமானால் பொது மக்களுடைய பூரண ஒத்துழைப்பு வேண்டும்!" என்று மேலும் கூறினார் ரெட்டியார்!

'ஆரிய—திராவிட கலாசாரத்தின் எதிரொலியே கம்ப இராமாயணம்'

—(:)—

'கம்பனுக்குப் பிறகே தமிழ் இலக்கியத்தில் மிகப் பெரும் மாறுதல் புகுந்தது'

—(:)—

கம்பன் செய்த வம்பால் திராவிட கலாசாரம் உருக்குலைந்து போயிற்று

சி.பி. இராமசாமி அய்யரே உண்மையை கக்குகிறார்

சிதம்பரம், ஏப். 18—

"துளசிதாசர் இராமாயணம் இந்தியால் ஆக்கப்பட்டு இருக்கிறது. நீண்டகாலத்துக்கு முன்பாகவே தமிழ், கம்ப இராமாயணம் எனும் பெரும் இலக்கியத்தைப் பெற்று இருக்கிறது."

"ஆனால், கம்ப இராமாயணத்திலிருந்து, தமிழ் இலக்கியத்தில், மிகப் பெரும் மாறுதல் ஏற்பட்டு இருக்கிறது.

ஆரிய நாகரீகம்—திராவிட நாகரீகம் எனச் சொல்லப்படுகிற இரு நாகரீகக் கூட்டிற்கு, அதாவது, வடநாட்டு உணர்வும், தென்னாட்டு உணர்வும் ஒரே கூட்டாகி உள்ளதற்கு ஓர் எடுத்துக்காட்டாக கம்ப இராமாயணம் உள்ளது."

இந்தியாவின் ஒவ்வொரு பகுதியிலும் நிலவியுள்ள உணர்வு, முயற்சி, லட்சியம் ஆகியவற்றின் ஒற்றுமையை அது எடுத்துக் காட்டுகிறது. இம்மூலப் படிப்பினையைத் தான், கம்ப இராமாயணத்திலிருந்து கற்றுக வேண்டும்."

"பழம் பெரும் இலக்கியங்களைக் கொண்டுள்ள பெருமை தமிழ் மொழிக்கிருந்த போதிலும், பிறவற்றை தமக்குள் ஒன்றுபடச் செய்து, இந்திய நாகரிகத்திற்கே பெரும் மதிப்பைத் தரக்கூடிய, ஒரு சிறந்த கலவை கலாசாரத்தை உருவாக்குவதில், தமிழ் உணர்வானது இணக்கம் காட்டியுள்ளது."

—இவ்வாறு கம்பராமாயணத்தைக் குறித்து சர். சி. பி. இராமசாமி அய்யர் அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டில் கூறினார்.

"வெறும் பிரச்சாரமா?"

சோவியத் பிரதிநிதி கேட்கிறார்!

நியூயார்க், ஏப் 19—

அணு, நீர்வளிக் குண்டுகளைத் தடை செய்ய வேண்டுமென்ற சோவியத் யோசனை 'நாணயமானது; உண்மையானது; காரிய சாத்தியமானது,' என்று ஐ. நா. ஆயுதப் பரிகரணக் கமிட்டி கூட்டத்தில் ரஷியப் பிரதிநிதி விஷின்ஸ்கி பேசுகையில் தெரிவித்தார்.

ரஷ்ய யோசனை வெறும் பிரச்சாரம் என மேற்கு நாடுகள் விவாதிப்பதாகவும், ஆனால், உண்மை அது அல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அணு சக்தி ஆயுதம் எங்களிடம் இல்லாத சமயத்தில் அதைத் தடை செய்ய வேண்டுமென நாங்கள் கோரினோம்; இப்போது எங்களிடமும் அவ்வித ஆயுதங்கள் இருக்கின்றன; எனினும், தடை செய்யவேண்டுமென்பதில் எங்கள் அக்கரை குறையவில்லை; நாங்கள் நீர்வளிக் குண்டு தயாரித்துள்ளபோதிலும் அதைத் தடை செய்ய வேண்டுமெனக் கோருகிறோம்; இது பிரசாரமா?' என்று கேட்டார். அவர்!

நாடாருக்கு ஆச்சாரியார் ஆசி

'வால்மீகி வாலிபய வாழ்த்துகிறார்'

அரசியல் துறவு கொள்ளவில்லையாம்!

சென்னை, ஏப். 19—

'காமராசரின் திறமையால் அமைக்கப்பட்ட இன்றைய மந்திரி சபை பழைய மந்திரி சபையைவிட நிச்சயமாகபலம் வாய்ந்ததுதான். புதிய மந்திரி சபை நல்ல காரியங்களை செய்து நல்ல பெயரெடுக்கட்டும்!" என்று, இன்று அவரைச் சந்தித்த நிருபரிடம் கூறினாராம் முன்னாள் பிரதமர் ஆச்சாரியார்!

அரசியலைப் பற்றி விவாதிக்க விரும்பாத ஆச்சாரியார், காங்கிரசிற்கும், அதன் அதிகார பீடத்திற்கும், தான், ஆயுள் அங்கத்தினன் என்பதை ஞாபகப்படுத்தி தான் அரசியலிலிருந்து விலகவில்லை என்று கூறினாராம்.

தற்போது வால்மீகி இராமாயணத்திலே லயித்திருக்கும் ஆச்சாரியார், மறுபடியும் அரசியலில் எப்போது நுழைவார் என்று கூற முடியாவிட்டாலும், சரியான சந்தர்ப்பத்தை அவர் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பது மட்டும் தெரிகிறது.

பிரெஞ்சிந்திய விடுதலைப் போர்

32 கிராமங்கள் மீட்சி

புதுவை, ஏப். 19—

பிரெஞ்சிந்தியப் பகுதியில் மண்ணாடிப்பேட்டை கம்யூனைச் சேர்ந்த 13 கிராமங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்துவிட்டன; அவைகள், இந்தியாவுடன் இணைய வாக்குறுதி எடுத்துக் கொண்டன; இதுவரை இந்தக் கம்யூனில் 32 கிராமங்கள் விடுதலை அடைந்துள்ளன.

• • •

பாஸ்போர்ட் அமுல்!

புதுச்சேரி, காரைக்கால் ஆகிய பிரெஞ்சுத் திட்டுகளுக்குச் செல்லுவோருக்கு அடையாள அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

சென்னை போலீஸ் கமிஷனர், ஜில்லா கலெக்டர் தவிர மற்ற ஜில்லா கலெக்டர்கள், ஜில்லா மாஜிஸ்திரேட்டுகள், சப்-மாஜிஸ்திரேட்டுகள் ஆகியோர் அத்தாட்சிப் பத்திரம் வழங்க அதிகாரமுள்ளவர்கள்.

அத்தாட்சிப் பத்திரம் பெற விரும்புவோர் ரூ 1-க்கு தபால் பில்லைகள் வைத்து விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். இந்த அத்தாட்சிப் பத்திரம் 3 மாதத்திற்குச் செல்லுபடியாகும்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 20—4—54 செவ்வாய்

இலக்கியம் எங்கே?

★

அகில இந்திய எழுத்தாளர் மாநாடு அண்ணாமலை நகரில் கூடியது. எழுத்தாளர்கள் கூடிக் கலந்து பேசவும், தத்தம் கருத்துக்களைப் பரிமாறி பலன் பெறவும் மாநாடொன்று கூட்டப்பட்டது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். கூடிய இடமும் மிகச் சிறப்புடையதாகும். தமிழ் இலக்கியத்துக்குத் தக்க பாதுகாப்புத் தருவதற்கென்று உண்டாக்கப்பட்ட பல்கலைக் கழகம். பலவகைத் துறைகளிலும் அறிவும், ஆராய்ச்சியும், அழகும், வளமும் வெளிப்பட இயங்கும் பல்கலைக் கழகத்தில் இந்திய எழுத்தாளர்கள் கூடியது மகிழ்ச்சி தரத்தக்கதாகும்.

முன்பெல்லாம் ஒருவன் சிறந்த இலக்கியத்தை உண்டாக்க வேண்டுமென்றால், காட்டுக்குச் சென்று கடுந் தவம் புரிய வேண்டும்; கைலயங்கிரிக்குக் காலாலோ, தலையாலோ நடந்து செல்ல வேண்டும். ஆண்டவன் அருள்பாலிக்காமல் பாடப்பட்ட இதிகாச புராணங்கள் இல்லையென்றே சொல்லலாம். காளி மென்று துப்பிய வெற்றிலை எச்சிலை வாயில் பெற்றோ, அவளின் வேலால் நாவில் எழுதப் பெற்றோ, ஆண்டவன் அடியெடுத்துக் கொடுத்தோ, அல்லது குளத்தங்கரையில் குழந்தை அழுதுகொண்டிருக்க அந்த அழுகுரல் கேட்டு ஆலவாயப்பன் உமாதேவியோடு இடப வாகன ரூபமாய்த் தோன்ற, அழுகிற குழந்தையைக் கண்டு உலக மாதா இடப வாகனத்தினின்று இறங்கி வந்து, குழந்தையை மார்பு மீது அணைத்து பிலிற்றுகிற பாலமுதம் அளித்திட, அங்ஙனமே ஞானப் பால் உண்ட குழந்தைக்கு மழலை மொழி பேசும் பருவத்தையும் கடந்து சிறந்த கவிதா சக்தியை அடைந்திடவோ, இவ்வாறாக சிறந்த இலக்கியங்களையும், கவிதைகளையும் இயற்றியவர்களுக்கு ஆண்டவனின் அருளும் உதவியும் இல்லாமலிருந்ததில்லை.

பெம்மான் அடியெடுத்துக் கொடுத்ததால், சீர்மல்கும் திருத்தொண்டர் புராணத்தை சேக்கிழார் முடித்தார் எனவே, அந்த இலக்கியத்தின் அருமை பெருமைகள் சேக்கிழாருக்கு உரியவையல்ல—அடியெடுத்துக் கொடுத்த ஆண்டவனுக்குச் சென்றுவிடும்.

எவ்வுலகுக்கும், ஏரேழு பிறப்புக்கும் கலி தீர்க்கும் இதிகாசமாம் கம்ப இராமாயணம் காளியின் கடாட்சம் பெற்றதால் கம்ப நாட்டாழ்வாரால் இயற்றப்பட்டது ஆகவே, கடைசியாகப் பார்த்தால், கம்ப இராமாயணத்தின் பெருமையில் கம்பருக்கு எந்தப் பங்கும் கிடையாது—காளிக்கு முழு உரிமையும் கொடுக்கப்பட வேண்டும்.

எனவே, முன்பு இலக்கியங்களுக்கு மூல எழுத்தாளர்களாக இருந்தவர்கள் கைலாசநாதனோ, காளியம்மையோ, யாராவது கடவுளாக இருக்கும்.

கதையில் வரும் சம்பவங்களும், முக்கிய கதாநாயகன் கதாநாயகிகளும் பெரும்பாலும் முக்கண்ணனோ, நான்முகனோ. அலைகடல் துயில்பவனோ, ஐராவதம் ஊர்பவனோ இப்படி கடவுள்களாக, அல்லது அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும்.

எழுதுவதற்கு மூலகாரணமாக இருப்பவர்கள் ஆண்டவர்கள்; எழுதப்படுகிற கதைகளும் அவர்களைப் பற்றியதே! எனவே, இதிகாச புராணங்கள்—இந்தியாவின் இலக்கியக் கருவூலங்கள் என்று தரப்படுபவை, ஆண்டவர்களின் சுய சரிதைகளேயாகும். இவைகளின் எழுத்தாளர்கள் ஆண்டவர்கள்; எழுதிய மனிதர்களோ, கவிகளோ, எழுத்தாளர்கள் உபயோகப்படுத்துகிற வெறும் பேனாக்கட்டையைப் போல!

ஆண்டவன் இயற்றியது என்ற காரணத்தால் அந்த இலக்கியங்கள், மத ஏடுகளாக, எவ்வித மறுப்புமின்றி மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாயின.

ஆண்டவனைப் பற்றியது என்ற காரணத்தால், அதில் வரும் எந்த நிகழ்ச்சியையும் அப்படியே ஒப்புக்கொண்டு, புகழ வேண்டிய நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டான்.

ஆண்டவனின் பெயரால், இதிகாச இலக்கியங்கள், மக்களின் மனதை அடிமைப்படுத்தியது; ஆராய்ச்சி செய்யும் முறையை அழித்தது. காருகதன் கதையென்றால் காலட்சேபத்தைக் கேட்டதும் காணிக்கை தருவதை மட்டும் மக்களின் கடமையாக்கினரேயன்றி, வேறு எந்த வகையிலும் இலக்கியத்திற்கும் அவர்களுக்கும் தொடர்பு உண்டாக்கவில்லை.

இதிகாச புராண இலக்கியங்கள் ஆண்டவனால் ஆண்டவனுக்காக ஏற்பட்டன. இவ்வாறு மதத் தலைவர்கள் கூறி மக்களை நம்ப வைத்திருந்தனர். மக்களால் உண்டாக்கப்பட்டது, மக்களுக்காக உண்டாக்கப்பட்ட இலக்கியம் என்று எதுவும் இல்லாது போயிற்று—மத நம்பிக்கைகள் ஆட்சி புரிந்தபோது!

இன்றுகூட, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய எழுத்தாளர் மாநாட்டில்கூட, இராமாயண, பாரதம் போன்ற இதிகாசங்களே இந்தியாவின் இலக்கியங்கள் என்று பேசியுள்ளனர்.

அவை தெய்வீக ஏடுகள்; மகேசனைப் பற்றிய கதைகள்—மக்களைப் பற்றியவையல்ல.

இவையெல்லாம் மகேசனின் கதைகள் என்று ஒதுக்கி விட்டால், மக்களின் இலக்கியம் ஏதாவது இருந்ததா என்ற கேள்வி எழும்; தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஏராளமாக இருந்தன, இன்றும் இருக்கின்றன—காண்போர் மனமகிழும் வகையில்! கேட்போர் உள்ளம் வியக்கும் வகையில்!

புராண இதிகாசங்கள் ஆக்கம் பெறாத காலம், மகேசனின் கதைகள் மக்களின் மனதை அடிமைப்படுத்தாத காலம், தமிழகம் தமிழின் அகமாக இருந்த காலம்—அப்பொழுது மக்களின் இலக்கியங்கள் ஏராளமாக இருந்தன.

அகமும், புறமும், எட்டுத்தொகையும், பத்தும் பாட்டும் தமிழின் ஒப்புயர்வற்ற இலக்கியங்களாகும். பாடியவர்கள் தமிழ் மக்கள்! பாடப்பட்டதும் தமிழ் மக்களைப்பற்றி!!

தமிழகத்தின் முப்புறமும் முத்துகள் குவியும் கடலலைகள் ஒலித்தன; தமிழரின் அகத்திலோ முத்துக்களைவிட மதிப்புள்ள கருத்துக்கள் குவியும் முத்தமிழ் ஒலித்தது; ஒல்காப் பெருமை தொல்காப்பியமும், பல்லோர் புகழும் திருக்குறளும், நற்றிணையும், குறுந்தொகையும், ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறும், புறநானூறும், பத்துப் பாட்டும், மாட்சி பெற்று விளங்கின. காதலின் இனிமையும், வீரத்தின் பெருமையும், அறிவின் திறமும், ஆற்றலின் செறிவும் அந்தத் தமிழிலக்கியங்களில்—மக்களின் இலக்கியங்களில் கிடைத்தன. காதலி தன் காதலனைப் பற்றித் தோழியிடம் பேசிடும் கனி மொழிகளை அகநானூற்றில் கேட்கலாம்; பிரிந்து சென்ற காதலன், காதலியைத் தேடி விரைந்து வரும் காட்சியை, கலித்தொகையில் காணலாம். மகள் நடத்தும் இல்லறங் கண்டு மகிழ்ச்சியுறும் நற்றாயின் ஆசி மொழியை நற்றிணையில் படிக்கலாம்.

சேரர் வினைத்த தீரத்தைப் பதிற்றுப்பத்தில் காணலாம். செங்கோட்டு யாழைத் தாங்கி, பாணன் பாடுகிற பாட்டுகள் பத்துப்பாட்டில் ஒலிக்கின்றன. முடியுடை மூவேந்தரின் வீரச்செயல்கள், மங்காத மறவர் கூட்டத்தின் வெற்றி முழக்கங்கள், நாட்டின் வளன், நல்லவரின் அறவுரைகள், பொய்யா வையையும், புதுப்புனல் காவிரியும், தண்ணீர்ப்பொருநையும் நாட்டில் பாயுங் காட்சி, வயலிலே ஆடுகிற மயிர், களத்திலே குவிகிற செந்நெல், அதனைச் சுற்றி கொம்பெடுத்து, குழலெடுத்து உழவர் பாடுவது, அதுகேட்டு உழத்தியர் ஆடிவருவது—இதுவன்றோ தமிழ் இலக்கியங்கள், தமிழ் மக்களின் இலக்கியங்கள் தரும் பாடங்களாக, காட்சிகளாக இருந்தன.

இதிகாச புராணங்களில் ஈரேழு பதினாலு லோகங்களைப் பற்றிய வர்ணனை இருந்தது. சங்க இலக்கியங்களில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களைப் பற்றிய காட்சிகளே இருந்தன.

உண்மையான மக்கள் இலக்கியங்கள் அவை; அவைகளைப் பாடியவர்களும் மனிதர்களே. கபிலரும், பரணரும், வள்ளுவரும், இளங்கோவும், சாத்தனாரும், கோவூர் கிழாரும் இன்னும் எண்ணற்றப் புலவர்கள், தமிழகத்தின் மக்களைக் கண்டு, மக்களின் மனப்பான்மை உணர்ந்து பாடினார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய எழுத்தாளர் மாநாட்டில், இதிகாச புராணங்கள் தந்த ஒற்றுமை இலக்கியங்களை முதன்மைப்படுத்தி, அவைகளைப் போன்று தற்கால இலக்கிய ஆசிரியர்கள் எழுத முயலவேண்டும் என்று கூறப்பட்டதாம்.

தமிழகத்துக்கு அந்தத் தேவையுமில்லை, அவசியமுமில்லை. அந்த இலக்கியங்களும், கருத்துக்களும் தமிழிலக்கியத்துக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் புறம்பானவை

மண் பொம்மையைக் காட்டி, அதை வணங்கிக் கொண்டிரு—என்று கூறுகிறார்கள். அது வேண்டாம்; இதோ! தமிழ் மக்களுக்கென வள்ளுவர் தந்த முத்தாரமும், இளங்கோ தந்த சிலம்பும், சாத்தனார் தந்த மேகலையணியும் எண்ணற்ற புலவர்கள் தந்த அணியும், பணியும், பொன்னும் மணியும், வளையும், குண்டலமும் இருக்கின்றன. இவற்றை நாம் மறவாதிருந்தால், அவற்றின்மீது தூசு படியாமலும் மாசு சேராமலும் பார்த்துக் கொண்டால் நமக்குக் களிப்பூட்டவல்ல சொத்துக்களே ஏராளம்.

இலக்கியம் என்பது வாழ்க்கையின் இலட்சியத்தை விளக்குவதாக இருக்க வேண்டும்.

இலக்கியம் என்பது மக்கள் உள்ளத்தை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

இலக்கியம் என்பது, மக்களின் உள்ளத்தில் எழுச்சி பெற்று, வெளிப்படுத்த முடியாது கிடக்கும் எண்ணங்களைத் தருவதாக இருக்க வேண்டும்.

இலக்கியம் மக்களின் வாழ்க்கையைப் பற்றியதாக இருக்க வேண்டும்.

சிறந்த இலக்கியம் உண்டாவதற்கு கட்டுப்பாடற்ற சூழ்நிலையும், உரிமையைப் பாதுகாக்கும் வாழ்க்கையியலும் தேவை. ஆனால், இன்று தமிழகத்திலும், இந்திய துணைக் கண்டத்தில் பிற பகுதிகளிலும், மனதை மருளச் செய்யும் அடக்குமுறையும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் அடிமை நிலையும், புதுக் கருத்துக்களை மங்கவைக்கும் இருட்டு நிலையும் இருக்கின்றன. சமுதாயம், அரசியல், பொருளாதாரம் இவைகளால் பூணப்பட்டிருக்கும் அடிமைத் தளைகள் அகற்றப்பட்டால்தான், அல்லது அவற்றை அகற்றுவதற்காக எழுகின்ற மனவெழுச்சியால்தான் நல்ல இலக்கியம் மலர முடியும்.

நாட்டுக்கு இலக்கிய வளர்ச்சி தேவை; மக்களுக்குப் புது இலக்கியம் தேவை. ஆண்டவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட இலக்கியம் மக்களின் இலக்கியமாகாது. அதைப் போல ஆளவந்தார்களால் அடியெடுத்துத் தரப்படுகிற இலக்கியமும் மக்களின் இலக்கியமாகிவிடாது.

உர பேர ஊழல் வழக்கு

எஸ். ஒய். கிருஷ்ணசாமி மீது 8 குற்றச்சாட்டுகள்

புதுடில்லி, ஏப். 17—

பம்பாய் சானுபதி கம்பெனியிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு, உர பேரம் செய்வதில் இந்திய அரசாங்கத்தை மோசடி செய்ததாக, இந்திய விவசாயப் பகுதியின் உதவிக் காரியதரிசி எஸ். ஒய். கிருஷ்ணசாமி அய்யர் என்பவர்மீதும், மற்றும் 6 பேர் மீதும் அரசாங்கம் தொடர்ந்த வழக்கில் குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டுள்ளது.

திரு. கிருஷ்ணசாமி பேரில் லஞ்சம் வாங்கியதற்கும், அதைத் தொடர்ந்தும் 8 குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இதில், சானுபதி கம்பெனியிடமிருந்து அணிமணிகள், கம்பளம், எலெக்டிரிக் சாமான்கள், ரூ 10,000 இவைகளையெல்லாம் கிருஷ்ணசாமி லஞ்சம் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவருக்குக் கீழ் வேலை பார்த்த திரு. சி. எஸ். டி. சாமி என்பவர், பட்டுத் துணிகள், சில்லரைச் சாமான்கள், ஒரு தடவை ரூ. 100-ம், இரண்டாந் தடவை ரூ 2000-ம் இனும் பெற்றதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கூடிச் சதி செய்து, இனும் கொடுத்து, சர்க்காரை மோசடி செய்ததாக, பம்பாய் சானுபதி கம்பெனியைச் சேர்ந்த 5 பேர்கள்மீது குற்றப் பிரிவுகள் வாசிக்கப்பட்டன.

கஸ்னபர் அலிகான்

இந்தியாவிலிருந்து 'அழைக்க'ப்படுகிறார்!

கடமையில் தவறினார்?

காரச்சி, ஏப். 18—

இந்தியாவில் பாக்-ஹை கமிஷனராயுள்ள ராஜா கஸ்னபர் அலிகான் திருப்பி அழைக்கப்படுவார்; அவருக்குப் பதில் வேறொருவர் நியமிக்கப்படுவார்.

அவர் எதற்காக அனுப்பப்பட்டாரோ அந்த வேலையைப் பூர்த்தி செய்வதில் மோசமாகத் தவறிவிட்டாராம்.

பாக்-சர்க்காரால் பலமுறை எச்சரிக்கப்பட்டும் அவர் பல முக்கிய விஷயங்களில் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியும் அறிக்கைகள் வெளியிட்டும் வந்ததாகவும் சொல்லப்படுகிறது.

முந்திரி பருப்பு தொழிலில் நெருக்கடி!

இந்திய சர்க்கார் கவனிக்குமா?

புதுடில்லி, ஏப். 18—

அயல் நாட்டு மார்க்கெட்டுகளில் முந்திரி விலை குறைந்ததன் காரணமாக, திரு.—கொச்சி மாநிலத்தில் முந்திரி பருப்பு தொழிலில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு சில தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டதால் ஆயிரக்கணக்கான பேர்கள் வேலையிழந்துள்ளனர்.

இந்தத் தொழில் சீர்பட இந்திய சர்க்கார் உதவவேண்டும் என வற்புறுத்தப்பட்டுள்ளது.

முந்திரி பருப்புகளுக்கு புது மார்க்கெட்டுகளைத் தேடுவதில் சர்க்கார் முனைந்துள்ளதாகத் தெரிகிறது. அயல் நாடுகளுடன் செய்து கொள்ளப்படும் வர்த்தக உடன்படிக்கையில் இப்பொருளையும் ஏற்றுமதி பொருள்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

அ. இ மொழிவாரி மாநிலக் கமிட்டி, ஐதராபாத்தைப் பங்கு போடவும் நிஜாமை [illegible] விலிருந்து நீக்கவும் இந்திய முழுவதும் இயக்கம் ஆரம்பிப்பதென தீர்மானம் நிறைவேற்றியது.

கழகச் செய்திகள்

★

குளே (17-வது வட்டம்) தி. மு. கழகம்

சென்னை, ஏப். 13—

4—4—54ல், தோழர் மு கன்னியப்பன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் புதிய செயலாளர், புதிய பொருளாளர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்; கழக வரவு-செலவு ஏற்றுக்கொள்ளப்பட்டது; கழக ஆண்டு விழாவை மே திங்களில் நடத்துவதென்றும், விழா நடத்தும் பொறுப்பை ஒரு குழுவின் பொறுப்பிலும் விடப்பட்டது.

● ● ●

28—3—54-ல், தோழர் மு மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில், திரு. வி க, எம் என். ராய், சாமியப்பா, வி வி தனுஷ்கோடி ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது; தோழர்கள் மு கன்னியப்பன் செயலாளராகவும், சு. பாலன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்; செயற்குழுவில் ஏற்பட்ட காலியிடங்களுக்கு தோழர்கள் தூய மணி, இராசஇரத்தினம், தேவி ஜோசப், உ பாலு, இராசசேகரன், பாட்சா, செகந்நாதன் ஆ அரசு—ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விடத்திலாம்பட்டியில் தி. மு. கழகம்

8—4—54 இரவு விடத்திலாம்பட்டியில் தோழர் எச்சமன் தலைமையில் தோழர்கள் மீ சு. இளமுருகு, இளங்கீரன், நெடுங்கிரன் முன்னிலையில் தி. மு. கழகக்கிளை நிறுவப்பட்டது பின்னர் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: கே. பி. முகம்மது; துணைச் செயலாளர்: செ. பாசுராமன்; பொருளாளர்: கு. துரைச்சாமி; மாவட்டப் பிரதிநிதி: எச்சமன்; செயற்குழு உறுப்பினர்கள்: வெ. முத்தலியு, மை மீராசா, ச. கி. ஆண்டி, அ ஆண்டி, ந பெருமாள், மு கருப்பன், பொ. அரசன், பொ. கருப்பன், மா. சண்முகி, பொ. அண்ணுவி, சிரங்கன்.

திருவெண்காடு தி. மு. கழக ஆண்டு விழா

திருவெண்காடு தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் கொடியேற்று விழா வாற்றி, கூட்டத்தைத் துவக்கி வைத்தார்; தோழர் ஆர். பாலகுருசாமி தலைமை தாங்கி கழகத்தின் நோக்கங்களை விளக்கினார். பின்னர், தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், மேல நாட்டு விஞ்ஞான வளர்ச்சியையும், தமிழகத்தின் விஞ்ஞான வளர்ச்சிக் குறைவையும் விளக்கினார்; ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தால், இந்நாட்டின் விஞ்ஞான வளர்ச்சி கோலாப்பாய் முடையும் அளவிற்கு ஆகிவருகிறதென்று குறிப்பிட்டார்; சென்னை சர்க்காரின் அனுவசிய செலவையும், ஊதல்களையும் சுட்டிக் காட்டினார். தோழர் சி. கேசவன் ஆண்டறிக்கை வாசித்தார்.

குரும்பலூரில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

குரும்பலூர் தி. மு கழகப் பொதுக்கூட்டம் அறையூர் தோழர் அழகுமுத்து அவர்கள் தலைமையில் 9—4—54 இரவு 7-மணிக்கு நடைபெற்றது தலைவர் முன்னுரைக்குப் பிறகு, தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஈ வெ. கி. சம்பத் ஆகியவர்கள் திராவிட நாட்டு மக்கள் சமூக, அரசியல், பொருளாதார விடுதலை குறித்தும், திராவிடத் தனியரசு பெற்றால்தான் நம் மக்கள் வாழ்க்கை நிலை உயரும்—முன்னேற்றம் காண முடியும் என்பதை விளக்கியும் பேசினார்கள்.

கண்டமங்கலம் தி. மு. க.

7—4—54 இரவு 7 மணியளவில் செயற்குழுக் கூட்டம் தோழர் என். ஆர். முருகையன் தலைமையில் நடைபெற்றபோது: தோழர்கள் வை ராமசாமி, செயலாளராகவும், செ. நாராயணசாமி துணைச் செயலாளராகவும், ச. கச்சி பொருளாளராகவும், இரா. முருகையன் மாவட்டப் பிரதிநிதியாகவும், சி வீராசாமி, இரெ. முருகையன் விளம்பர உறுப்பினர்களாகவும், செயற்குழு உறுப்பினர்களாக அ. சின்னப்பா, ச. சின்னபிள்ளை, இரா. பெருமாள், த. சிவசாமி, ச வடிவேலு, ரா. பெரியசாமி, த தவசாமி, இவர்களை செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலூர் (வ. ஆ.) தி.மு.க.

13—4—54ல், கழக நிலையத்தில், செயலாளர் வி. இ. செயராமன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அது போது நவம்பர் முதல், மார்ச் மாத முடிய வரவு—செலவு கணக்கை சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஆமதாபாத் தி. மு. கழகம்

4—4—54 மாலை 5-30 மணியளவுக்கு தோழர் ந. பெருமாள் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, திருச்சி பொதுக் குழுத் தீர்மானத்தை வரவேற்றும், கழக வளர்ச்சிக்கான வழிகளை வகுக்க கிளைக் கழகங்களைக் கேட்டுக்கொண்டும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

உலிபுரம் தி. மு. கழகம்

8—4—54 இரவு 7-30 மணியளவில் கழகக் கட்டிடத்தில், உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், சேலத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஆ தி ர. அரைசாமி, உ. செ. இராமசாமி ஆகியவர்களையும், தொண்டர் படைக்கு வீ. வையாபுரி, டைலர் கோவிந்தராசு ஆகியவர்களையும் அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது

செய்திச் சுருக்கம்

★

விவசாயிகளுக்கு அபராதம்

கலெக்டரிடம் மனு

14—4—54 அன்று வ. ஆ திருப்பத்தூர் சமாபந்தியில், தோழர் வி. என். தத்தப்பன், மனு ஒன்றை கலெக்டரிடம் கொடுத்தார். மனுவில், பிர்க்கா சமாபந்தியை வாணியம்பாடியில் நடத்துமாறும், புறம்போக்கு நிலங்களில் பயிரிட்ட விவசாயிகளுக்கு ரூ 400, 100, 87 வீதம் ஏக்கர் ஒன்றுக்கு அபராதம் விதித்து, அபராதத் தொகைக்காக பயிர்களை ஜப்தி செய்வதைக் கண்டித்தும், மற்றும் பல கோரிக்கைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது. கலெக்டர் நிலங்களை நேரில் வந்து பார்ப்பதாக வாக்களித்தார்.

விவசாயிகளுக்குத் தொல்லை ?

திருநெல்வேலி, ஏப். 17—

நான்குனேரி தாலூகா களக்காடு விவசாயிகளுக்கு விவசாயம் செய்த கூலியை நிலச்சுவான்தார் மறுத்துவிட்டதை, திருநெல்வேலி கலெக்டரிடம் தெரிவிக்க 13—4—54 அன்று சுமார் 2,500 விவசாயிகள் களக்காட்டிலிருந்து புறப்பட்டு, 14—4—54 காலை 10 மணிக்கு நெல்லை வந்து சேர்ந்தனர்.

55 மணி நேரம் சைக்கிள் சவாரி

லால்பேட்டை, ஏப். 18—

7—4—54 புதன்கிழமை காலை எட்டு மணிக்கு தோழர் எம். முகம்மது இஸ்மாயில் முன்னிலையில் தோழர் ஏ. முகம்மது இஸ்மாயில் (தி. மு கழகத் தோழர்) என்ற இளைஞரும் வி. எம். ஜெ உமர் என்ற இளைஞரும் 55 மணி நேர இடைவிடாத சைக்கிள் சவாரியைத் தொடங்கினர்.

9—4—54 வெள்ளிக் கிழமை மாலை 8 மணிக்கு சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினர்; மாலை 5 மணிக்கு மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி தோழர்கள் எஸ். என். இராமலிங்கம், எஸ். அப்துல்லா பேசினர் ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன.

முத்தமிழ் கலை வளர்ச்சி மன்றம் துவக்கம்

திருப்பூர், திராவிடப் புத்தகப் பூங்காவில் 11—4—54 காலை 10 மணிக்கு மன்றத்தின் அமைப்புக் கூட்டம் தோழர் அமரன் இன்னிசையுடன் ஆரம்பமாயிற்று. தோழர் சிந்தனைச் செல்வன் மன்றத்தின் நோக்கம் குறித்தும் வந்திருந்தோரை வரவேற்றும் பேசினர். தோழர் பி. இராமசாமி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அதுபோது தோழர்கள் சிந்தனைச் செல்வன் செயலாளராகவும், மு. பி. இராமசாமி, ஆ. இராசன், பி. இராமசாமி, க. இரா. பாண்டியன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டுமெனவும், மேலும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தோழர் நெடுஞ்செழியன் காந்தியார் படத்தைத் திறந்து வைப்பார்

சேலூர் (வ.ஆ.) ஊராட்சி மன்றத் தீர்மானம்

10-4-54ல், சேலூர் ஊராட்சி மன்றக் கூட்டம் துணைத் தலைவர் திரு ஏ. கோவிந்தராசு தலைமையில் நடைபெற்றது. அதுபோது, காந்தியார் படத்தை தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைக்க வேண்டுமென தோழர் டி. டி. வேதபுரி அவர்கள் தீர்மானமொன்றை பிரரேபித்தார்; அதைத் தோழர் ஆர். மோசை ஆமோதித்தார்; தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

முற்போக்கு இளைஞர் படிப்பக திறப்பு விழா

13—4—54ல், திண்டுக்கல் வட்டச்சாலை புதூரில், தோழர் பழனிமுத்து தலைமையில், தோழர் டி. வெங்கடேசன் எம் சி. அவர்களால் படிப்பகம் திறக்கப்பட்டது. 'முற்போக்கு' என்ற பொருள் பற்றி தோழர் என். திருவேங்கடம், மற்றும் பலர் விரிவுரையாற்றினர். செயலாளர்: பெரியநாயகம்; பொருளாளர்: குழந்தைவேலன்; செயற்குழு உறுப்பினர்கள்: ரெங்கசாமி, கலைப்பித்தன், அ. பால் அரசு, கா முகிலன், ஆறுமுகம், ராமமூர்த்தி, டி வில்லியம், ஏழுமலை ராமக்காளை.

பிரெஞ்சிந்திய இணைப்புப் போராட்டத்திற்கு ஆதரவு

வேலூரை அடுத்த சத்துவாச்சாரியில் தோழர் ஏ பீமராஜ் தலைமையில் சர்வ கட்சி கமிட்டி கூட்டம் நடைபெற்றது. எல்லாக் கட்சி செயலாளர்களும் கலந்து கொண்டனர். பிரெஞ்சிந்தியப் போராட்டத்தை வரவேற்றும், புதிய கல்வி திட்டத்தைக் கைவிடும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்

கும்பகோணம், ஏப். 18—

11—4—54ல், நடைபெற்ற சங்கத்தின் தேர்தல் கூட்டத்தில், தோழர்கள் டி. என். சோமு தலைவராகவும், வி. சோமசுந்திரம் துணைத் தலைவராகவும், அ கிருஷ்ணன் பொதுக் காரியதரிசியாகவும், கு ரா. நாராயணசாமி துணைச் செயலாளராகவும், எம். வி. கிருஷ்ணமூர்த்தி பொருளாளராகவும், மற்றும் பல தோழர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும், கௌரவ உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பூர் மறுமலர்ச்சி மன்றம்

11—4—54 மாலை 6 மணிக்கு தோழர் மெய்மொழியன் இல்லத்தில் மறுமலர்ச்சி மன்றம் நிறுவப்பட்டு, தோழர்கள் ரா. கி மூர்த்தி செயலாளராகவும், இ. வை. தளபதி துணைச் செயலாளராகவும், சு. சேசையன் பொருளாளராகவும், ச நெடுமாறன், கி. இளங்கோ, க. சண்முகம், இ. சின்னையன், ஆ. வையாபுரி, கொ. க. சின்னையன், ஆ. வையாபுரி, கொ. க. பழனிசாமி, மெய்மொழியன், சுப்பிரமணியன் ஆகிய உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

திருமணங்கள்

16—4—54 காலை 9 மணிக்கு சென்னை வண்ணையம்பதி, சௌகார் அக்ரகாரம்ரோடு, திரு. பி. ராமசாமி அவர்களின் இல்லத்தில் திரு கே. கே. தங்கவேல் அவர்களுக்கும், — திருமதி பாப்பா (என்ற) மாரியம்மாளுக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நிறைவேறியது. தோழியர் சத்தியவாணிமுத்து தலைமை வகித்து திருமணத்தை இனிது நடத்தினார். திரு பி ராமசாமி வாழ்த்து கூறினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2½ நன்கொடை அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

திரு. ஆ மு ஏகாம்பர நாடார் திருமகன் ஏ ஆறுமுகத்திற்கும், திரு. மா. சண்முகம் நாடார் திருமகள் அனுசூயாவுக்கும் 16—4—54ல், சென்னை வண்ணையம்பதியில் புலவர் மயிலை சிவமுத்து தலைமையில் தமிழ்த் திருமணம் நடைபெற்றது. பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார், புலவர் செல்வராசு ஆகியோர் வாழ்த்துரை கூறினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

● ● ●

15—3—54 காலை 6½ மணியளவில் திருப்பூர் தோழர் என். வெங்கடாசலம் அவர்களுக்கும் —தோழியர் சரஸ்வதிக்கும் சீர்திருத்தத் திருமணம் தோழர் என். ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்கு, நண்பர்கள் பரிசுகள் வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடையாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம் — நன்றியுடையது — பொறுப்பாளர்.

● ● ●

அஞ்சூர், ஏப். 11—

கிருஷ்ணகிரியை அடுத்த அஞ்சூரில் தோழர் கமலநாதன் அவர்களின் தங்கை தோழியர் சரஸ்வதிக்கும் — தோழர் மல்லப்பாவுக்கும் 11—4—54 காலை 9 மணிக்கு தோழர் வி. வெப்பிரகாசம் தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி திருவாளர்கள் டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் எம். எல். ஏ, நா. சு. சம்பந்தம், கே. இராசாராம் ஆகியோர் பேசினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

செங்கமையில் 11—4—54ல், இளமதி—குணமதி வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. அது சமயம் புதுமடம் தோழர் அப்துல் கரீம் அவர்களும், மற்றும் தோழர்களும் சீர்திருத்த மணத்தின் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடுகள்

மே 1: சனிக்கிழமை

சமுதாய சீர்திருத்த மாநாடு

தலைவர்: தோழர் ப உ. சண்முகம்

துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன்

மே 2: ஞாயிற்றுக்கிழமை

தி. மு. கழக அரசியல் மாநாடு

தலைவர்: தோழர் இரெ. இளம்வழுதி

துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரண்டு நாட்களிலும் அண்ணு அவர்கள் எழுதிய நாடகங்கள் உண்டு

"தனி அரசு" ★ மாதம் மூன்று முறையாக மே மாத முதல் 1, 10, 20 தேதிகளில் வெளிவரும்.
ஆசிரியர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சந்தா: (தபாலில்)
ஆண்டுக்கு ரூ 4—8—0
ஆறு மாதம் ரூ. 2—4—0
மூன்று மாதம் ரூ. 1—4—0
தனிப் பிரதி 2 அணா

அரசியல், பொருளாதாரம், சமுதாயம்
சிறக்கும் கருத்து
இனிக்கும் எழுத்து
புதுப் புது அம்சங்களுடன்
புத்தலகு பூக்க மலருகிறது

1. பிரதி 1-க்கு 0—6—0 வீதம் தேவையான பிரதிகளுக்குத் தக்க முன்பணம் ஏஜெண்டுகள் அனுப்ப வேண்டும்.
2. ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் முன்பணம் அனுப்புவோருக்கு ஏஜென்சி தரப்படும்.

விபரங்களுக்கு: "தனி அரசு" :: விருதுநகர்.

வறுமைப் பிணி நீங்க வழிகோல வேண்டும்

—o—

விரட்டப்பட்டு ஓடி வரும் மக்களுக்கு வேதனை தராதீர்!

வாழ்க்கை வசதிக்கு சட்டரீதியான திட்டங்கள் வகுக்க முன்வாரீர்!

அரசியலாருக்கு கே. கே. நீலமேகம் அறிவுரை

"நம் நாட்டு மக்கள் சிலோன், பர்மா, மலாயா முதலிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்டு மிகவும் கஷ்ட நிலையில் இங்கு வந்து சேருகின்றார்கள்; அவர்களை, இங்கே வாழ வழியின்றி, திண்டாடிச் செத்து மடிந்து கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களை வரவேற்று வேலை கொடுத்து வாழ்வதற்கு உதவி அளிக்க முடியாத மாகாண அரசாங்கம், வடநாட்டிலிருந்து பதினாயிரக்கணக்கில் அம்மாகாண மக்களை அகதிகள் என்ற பெயரால் இம்மாகாணம் முழுவதும் குடியேற்றி, அவர்களுக்கு தனிச் சலுகைகள் அளித்து வருகின்றது. மத்திய அரசாங்க உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து, மாகாண அரசாங்கம் அவர்களுக்கு உத்தியோகம், வியாபாரத்திற்கு மூலதனம், குடியிருப்பதற்கு வீட்டு வசதிகள் கொடுத்து வருகிறது. இது நேர்மையும், நீதியும் ஆகுமா?"

"தன்னைப் பெற்ற தாய் பிச்சை எடுக்கிறாள்; மகன் கும்பகோணத்திலே கோதானம் கொடுக்கிறான்," என்று பழமொழி சொல்வதுபோல் மாகாண அரசாங்கம் நடைபெறுகின்றது. வருடத்தில் ஒன்பது மாதங்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் மந்திரிகள், ஒவ்வொரு ஊரையும் சுற்றிப் பார்த்தால், குடியிருக்க வீடின்றி, குடிக்கக் கஞ்சியின்றி, உடுக்க உடையின்றி மக்கள் உயிர்விடும் கோரக் காட்சியை அவர்கள் கண்ணால் காண முடியும்; அதை அவர்கள் கவனிப்பதில்லை.

"இந்த நாட்டை இப்பொழுதிருக்கின்ற வறுமைப் பிணியிலிருந்து, நீக்குவதென்றால், தற்பொழுதிருக்கின்ற அரசியல் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்; பணக்காரர்களை மாத்திரம் ஒழித்துவிட்டு சமதர்ம குடியரசை நிறுவ முடியாதென்பதை உணர வேண்டும்; அரசியல் சட்டரீதியாக இந்த நாட்டிலிருந்தும் நிலச்சுவான்தார்கள், கோயில்கள், மடங்கள், தர்ம ஸ்தாபனங்கள் பேரால் இருக்கும் சொத்துக்களை அரசாங்க நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து, பெரும்பாலான தொழில் நிலையங்களை அரசாங்கத்திற்குச் சொந்தமாக்கி, அதன் மூலமாக உழவர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் நிரந்தரமான தொழில்கள் அமைத்துக் கொடுக்க கூட்டுறவு முறையில் அரசாங்கம் நிறைவேற்றி, தொழில் கொடுக்கும் வகையில் அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதின் மூலம் இருக்க இடமும், உண்ண உணவும், உடுக்க உடையும் சட்டரீதியான முறையிலே அவர்களுக்கு அளிக்கும்படியான முறையில் இந்த நாட்டில் சட்டங்கள் நிறைவேற்ற வேண்டும். அதற்கு மாநில அரசாங்கம் தனி நாடாகப் பிரிந்தாலொழிய, அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது."

—என்று, தஞ்சையில் நடைபெற்ற அரசியல் மாநாட்டின் வரவேற்புரை ஆற்றுகையில், தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"நம் கழகம் துவங்கி நான்கு ஆண்டுக் காலத்தில் சுமார் 18 மாவட்ட மாநாடுகளும், ஓர் மாநில மாநாடும் கூட்டியிருக்கிறோம். பத்தொன்பதாவது மாநாடாக நடைபெறும் இம்மாநாடும் மற்ற மாநாடுகளைப் போலவே உங்கள் அனைவரின் ஒத்துழைப்பினால் வெற்றிகரமாக முடியும் என நம்புகிறேன்.

"இந்நாட்டு முக்கியத் தொழிலான நெசவுத் தொழிலாளர்கள் டாக்கா மஸ்லின் போன்ற முக்கியத் துணிகளை அயல்நாட்டிற்கு அனுப்பிய அதே தொழிலாளிகள் நம் நாட்டில் பஞ்சிருந்தும், நூல் இருந்தும், அவர்களுக்குத் தேவையான நூல் கிடைக்காமல், வாழ வழியின்றி, நாடு பூராவும் திரிந்து தெருத் தெருவாய்ப் பிச்சை எடுத்து, பிச்சையும் கிடைக்காமல் பட்டினியால் மடியும் இந்த நேரத்தில், நாம் இங்கு கூடியிருக்கிறோம்!

"இந்நாட்டில் தொழில் இல்லாமல் பல தொழில்களும் சீர்கெட்டு இருக்கிற நிலையில், தொழிலாளிக்கும்—முதலாளிக்கும் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக—ஊர்ப்புச் சட்டம், பாக்டரி சட்டம்—என்று பலவிதமான சட்டங்கள் இயற்றி, தொழிலாளிக்கும்—முதலாளிக்கும் மனக்கசப்பை உண்டுபண்ணி, குடிசைத் தொழில்கள் நசிந்து வந்து கொண்டிருக்கும் நேரத்திலே கூடி இருக்கிறோம்!

"அந்தத் தொழிலில் அனுபவம் பெற்றவர்களைக் கலந்து ஆலோசித்து சட்டம் செய்யாத காரணத்தினால், முதலாளிகளும்—தொழிலாளிகளும் பல கஷ்டங்களை, அனுபவித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே கூடியிருக்கிறோம்.

தொழிற்சாலை இல்லாத இம்மாவட்டத்தில், நாகையிலிருக்கும் ஒரே ஒரு தொழிற்சாலையையும் சென்னைக்கு மாற்றுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே கூடி இருக்கிறோம்!

கோடிக்கணக்காக வருடா வருடம் இலாபம் வரும் ரயில்வே கட்டணங்களை ரூபாய்க்கு 4 அணா வீதம் அதிகப்படுத்தும் மத்திய அரசாங்கம், மூன்றாம் வகுப்புப் பெட்டியில் பிரயாணம் செய்கின்றவர்கள், கக்கூசிற்குச் சென்றால், கால் அலம்புவதற்கு ஒரு தொட்டியாக குழாய்கூட வைத்து வசதி செய்து கொடுக்க முடியாத நிலையில், கோடி கோடியாக ரயில்வே மூலம் வருமானத்தை மிச்சப்படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் கூடி இருக்கிறோம்!

சில தோழர்கள், அரசாங்கம் வரி போடுகின்றதென்றால் மகிழ்ச்சி அடைகின்றார்கள்; அவர்கள் அறியாமைக்கு நான் வருந்துகிறேன். எந்தப் பொருள்கள் மீது வரி விதிக்கப்பட்டாலும், எந்த வியாபாரியும் சர்க்காருக்கு கமிஷன் ஏஜண்டு மாதிரி இருந்து அந்த வரியை அந்தந்தப் பொருள்கள் மீது வைத்து பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிறார்கள்.

இவ்வருடம், உணவுப் பொருள் மீதும், மற்ற இதர சாமான்கள் மீதும் புதுப் புது வரிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். வரியினால், அவைகள் விலை கூடுதலாகி, வாங்கும் சக்தியை இழந்து மக்கள் வாழ்வதைவிட மாள்வது மேல் என்று எண்ணத்தக்க நிலையை அரசாங்கம் உண்டுபண்ணி வருகிறது.

"நாட்டு மக்கள் நலத்தில் கவலையுற்ற அறிவாளிகளும், பொது மக்களும் நன்கு சிந்தித்து, இந்த தொல்லையிலிருந்து மீள ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன். மத, ஜாதி அற்ற சர்க்கார் என்று சொல்லிக் கொண்டு, எல்லா ஜாதி மதங்களையும் சுதந்திரம் வருவதற்கு முன் இருந்ததைப்போலவே இருக்க அனுமதித்துக்கொண்டிருக்கும்போது, நம் இன மக்கள் முன்னேறுவதற்கு ஓரளவு உதவியாயிருந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை மட்டும் ஒழித்துவிட்டு, நம் உரிமைகளை மத்திய அரசாங்கத்தாரால் பறிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் நாம் கூடி இருக்கிறோம்,

"இந்நாட்டு மொழியை அழித்தால்தான் தங்கள் ஆதிபத்தியம் நிலைக்குமென்ற எண்ணத்தால், நம்மீது நமக்கு வேண்டாத இந்தி மொழியை புகுத்தி நம்மை அழிக்க இருக்கும் நேரத்தில் நாம் கூடியிருக்கிறோம்.

இந்நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததற்குக் காரணம், காங்கிரஸ்காரர்கள் பலாத்கார முறையில் தந்திக் கம்பி அறுத்தல், தபாலாபீசைக் கொளுத்தல், தண்டவாளங்களைப் பெயர்த்தல், ஆபீசர்கள்மீது திராவகம் ஊற்றல், பாலம் உடைத்தல் ஆகிய பல நாச வேலைகள் செய்ததுதான் என்று கூறிக்கொண்டு, அப்படிச் செய்தவர்களுக்கும், இதர காங்கிரஸ்காரர்களுக்கும் தியாகி என்பதன் பெயரால், இந்த அரசாங்கம் அரசாங்கப் பொதுச் சொத்திலிருந்து 5 ஏக்கர் 10 ஏக்கர் என்று தியாகிகள் மானியம் கொடுத்திருப்பது நேர்மையற்றதும், நியாயத்திற்கு புறம்பானதும் ஆகும்.

தங்கள் கட்சிக்காரர்களுக்கு ஏதாவது பரிசு கொடுக்கவேண்டுமானால்—நீதியான அரசாங்கம் நடத்துபவர்களானால்—காங்கிரசின் நிதியிலிருந்தோ அல்லது காங்கிரஸ்காரர்களிடம் நிதி வசூலித்தோ கொடுத்திருந்தால் அது நேர்மையான செய்கையாகும்.

அரசாங்கம் தங்கள் கையில் இருப்பதால், தங்கள் கட்சிக்காரருக்கு அரசாங்கச் சொத்தைக் கொடுத்து, அவர்களை விலைக்கு வாங்கி, வரப்போகும் பொதுத் தேர்தலில் ஆதரவாக வேலை செய்வதற்கென்றே இத்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்தியாவிலுள்ள எந்த போலீஸ் இலாகாவையும் விட, சென்னை போலீஸ் இலாகா நல்ல பெயர் பெற்றது; அது, பொதுமக்களைப் பாதுகாக்க ஏற்பட்ட இலாகாவாகும். கொலை, களவு, திருடன் முதலியவர்களைக் கண்டித்து நல்ல முறையில் ஊரைப் பாதுகாத்து வரவேண்டிய அவர்களை, தங்கள் வேலையைச் செய்யவிடாது, நம் கழகத் தோழர்களையும், இதர எதிர்க் கட்சியாளரையும் பார்க்குமாறு மதவிலக்கு சம்பந்தமான வேலைகளையும் கண்காணித்துவர உபயோகப்படுத்தி வருவதால், அவர்கள் ஊர் பாதுகாப்பு வேலையைக் கவனிக்க முடியாமல் செய்யப்பட்டு வருவதால் அடிக்கடி நாட்டில் கொள்ளை, கொலை ஏற்பட்டு வருகிறது.

இந்த இலாகாவில் இருப்பவர்களுக்கு உணவிற்குப் போதுமான சம்பளமும் தரப்படுவதில்லை. மந்திரிகள் வெளியில் இருந்தபோது ரூ 500-க்கு மேல் யாருக்கும் சம்பளம் கொடுக்க மாட்டோம் எனக் கூறியவர்கள் தங்கள் சம்பளங்களை மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ 1500 ஆக உயர்த்தியும், அவர்களுக்கு 30 ஆயிரம் கொடுத்துக் கொடுக்கவும் தவறவில்லை.

நமக்கு மூன்றாம் இரண்டு அறப்போராட்டங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன—ஒன்று கல்லக்குடி; மற்றொன்று நம் இளைஞர்களை படிப்பாளத்தின் தகுதியற்ற எண்ணியுள்ள வர்ணாசிரமக் கல்வித் திட்டம்! அத்திட்டங்கள், நாட்டு மக்களை நடைப்பிணமாக்கும் திட்டங்களாகும்,

இந்தக் கஷ்ட நஷ்டங்களிலிருந்து நாம் மீள ஒரே வழி, நாட்டுப் பிரிவினைதான்—மத்திய அரசாங்கத் தொடர்பிலிருந்து விடுபட வேண்டும். சிலோன், பர்மா, பாகிஸ்தான் நாடுகளைப் போலவே நாமும் நம் நாட்டு மக்களைக் கொண்டே அன்னியர் தலையீடு இடமின்றி அரசாட்சி நடத்த வேண்டும். நம்முடைய குறிக்கோள் சமதர்மக் குடியரசாகவே தீர வேண்டும். இதற்காகவே, 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்ற முழக்கம் வெற்றி பெற வேண்டும்.

"பொதுவுடைமைத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்—இந்த நாட்டில் சமதர்ம ஆட்சியை நிறுவுவதற்காகப் பாடுபடுவதாகச் சொல்லுகிறீர்கள்; சமதர்மக் குடிஅரசுத் திட்டம் இந்த நாட்டில் நடைமுறையில் நடைபெறவேண்டுமானால், திராவிட இயக்கத் தலைவருடனும், மற்றும், காங்கிரஸ் கட்சியில்லாத மற்ற தோழர்களுடனும் கலந்து ஒரு கூட்டு ஐக்கிய முன்னணி ஏற்படுத்திக் கொண்டால்தான், அரசியலில் வெற்றிகாண முடியுமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்; அப்படி ஐக்கிய முன்னணி அன்றி தாங்கள் தனித்த முறையிலே வெற்றிகாணவிரும்பினீர்களானால், அது தங்களுக்கு ஏமாற்றமாகவே முடியும்; தற்பொழுது, தங்கள் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் சட்ட சபை ஸ்தானங்களைக் கூட அடுத்த சட்டசபைத் தேர்தலில் தாங்கள் இழக்க நேரிடுமென்பதை எச்சரிக்கை செய்கிறேன்."

சேலம் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடுகள்

மே 1, 2-ந் தேதிகளில் நடைபெற இருக்கும் சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாட்டுக்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

மாநாட்டிற்கு 50 ஆயிரம் மக்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்; மாநாட்டில் கைத்தறித் துணி ஸ்டால் ஒன்று இலவசமாக, வாடகையின்றி வைக்கப் படுகிறது. மாநாடு நடைபெறும் இடத்தைச் சுற்றிலும் ஏராளமான உணவு விடுதிகள் உள்ளன; மேலும் மாநாட்டுப் பந்தலுக்குள் உணவு ஸ்டால்கள் வைக்கப்படும். மாநாட்டு நிர்வாகிகள் நன்கொடைக்காகவும், மாநாட்டு டிக்கட்டுகள் விற்பனை செய்யவும் கீழ்க்கண்ட நாட்களில் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கின்றனர்.

நிர்வாகிகள், தங்கள் பகுதியில் சுற்றுப் பயணம் செய்யும் பொழுது கழகத் தோழர்கள் உடன் இருந்து நன்கொடை பெறவும், டிக்கட்டுகள் விற்பனை செய்யவும் உதவுமாறு கோரப்படுகின்றனர்.

சுற்றுப் பயண நிகழ்ச்சிகள்

21—4—54: நாமக்கல்வட்டம்
22—4—54: திருச்செங்கோடு
23—4—54: ஓமலூர் வட்டம்
24—4—54: சரூர் வட்டம்
25—4—54: தாமபுரி கிருஷ்ணகிரி
26—4—54 }
27—4—54 } சேலம்

சென்னை மந்திரி சபை

கேரள பிரதிநிதித்துவம் பற்றி காமராஜ்

சென்னை, ஏப். 19—

மந்திரி சபையில் கேரளர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு, "அதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை" என்று முதலமைச்சர் காமராஜ் பதிலளித்தார்.

மேலும், சமீபத்தில் சென்னை வந்த பிரதமர் நேருவுடன் இது பற்றி பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்றும், உதவி மந்திரிகள் நியமிக்கும் விஷயமாகவும், தான் இன்னும் ஒருவித முடிவும் செய்யவில்லை என்றும் கூறினார் காமராஜ்

குண்டர்கள் தொல்லை

காரைக்கால், ஏப். 19—

காரைக்காலில் இந்திய இணைப்பு ஐக்கிய முன்னணித் தலைவர்கள் சிலர் வீட்டில் காரைக்காலைச் சேர்ந்த காலிகள் கல்லை எறிந்தும், ஜன்னல் கதவுகளை உடைத்தெறிந்தும், வீட்டின்மேல் ஏறி, பறந்துகொண்டிருந்த இந்தியக் கொடிகளை இறக்கியும் தொல்லை கொடுத்தார்களாம்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.,